

திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி, தாராபுரம் மேற்கு ஒன்றியம் கோவிந்தாபுரம் ஊராட்சி மற்றும் சின்னப்புத்தூர் ஊராட்சி கழக நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடிகுழு நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், ஒன்றிய கழக செயலாளர் எஸ்.வி.செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் மாவட்ட துணை செயலாளர் பிரபாவதி பெரியசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தன்சேகர் உள்பட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், வாக்குச்சாவடி குழு நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வீரபாண்டி கிராமத்தைச் சேர்ந்தவர் வேல்மாறன். இவர் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில விவசாய அணி தலைவராக உள்ளார். கடந்த சில மாதங்களாக வேல்மாறன் உடல் நலம் பாதிக்கப்பட்டு இருந்தார். இந்நிலையில் நேற்று அவர் இறந்தார் இது பற்றி தகவல் அறிந்த கழகத் துணைப் பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சருமான பொன்முடி வேல்மாறன் உடலுக்கு வீரபாண்டி கிராமத்திற்கு நேரில் சென்று மலர்வளையம் அமைத்து அஞ்சலி செலுத்தினார். மேலும் அவரது குடும்பத்துக்கு ஆறுதலும் கூறினார். இந்த நிகழ்வில் செயற்குழு உறுப்பினர் செல்வராஜ், ஒன்றிய கழக செயலாளர்கள் ரவிச்சந்திரன், பிரபு, லூயிஸ், முருகன், மணிவண்ணன், சக்தி சிவன், வெங்கட், ஐயப்பன், ராஜசேகர், ராமச்சந்திரன், பிரகாஷ், கணேசன், குணா, சரவணன் உள்ளிட்ட நிர்வாகிகள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.


### ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வுடன்

# காங்கிரஸ் ரகசியக் கூட்டணி அமைத்து சதிச் செயல்களில் ஈடுபட்டுள்ளது!

## கேரள முன்னாள் முதல்வர் பினராயி விஜயன் குற்றச்சாட்டு!

*திருச்சூர், ஜூலை 19-*

ஆர்.எஸ்.எஸ். மற்றும் பா.ஜ.கவுடன் காங்கிரஸ் ரகசிய கூட்டணி அமைத்து சதிச் செயல்களில் ஈடுபட்டுள்ளதாக கேரள முன்னாள் முதல்வர் பினராயி விஜயன் குற்றம் சாட்டி உள்ளார்.



திருச்சூரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய பினராயி விஜயன், கேரள வக்ஃப் வாரிய மறுசீரமைப்பு விவகாரத்தில், பா.ஜ.க.வுக்கு ஆதரவாகவும், ஆர்.எஸ்.எஸ் மற்றும் சங் பரிவார அமைப்புகளின் விருப்பத்திற்கு ஏற்பவும் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணிவளைந்துகொடுப்பதாக குற்றம்சாட்டினார்.

காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் பா.ஜ.க மற்றும் ஆர்.எஸ்.எஸ் அமைப்புகளின் கொள்கைகளுக்கு எதிராக வலுவான நிலைப்பாட்டை எடுக்காமல், மென்மையான இந்துத்துவா அரசியலை காங்கிரஸ் கையில் எடுத்துள்ளதாகவும் அவர் விமர்சித்தார்.

அண்மையில் கேரளத்தில் நடைபெற்ற தேர்தல்களில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைத் தோற்கடிப்பதற்காக காங்கிரஸ், மற்றும் பா.ஜ.க ஒன்றிணைந்து ரகசியக் கூட்டணியை உருவாக்கிச் செயல்பட்டதாகவும் பினராயி விஜயன் குற்றம்சாட்டினார்.

காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவர் கே.சுதாகரன், மார்க்சிஸ்ட் கட்சியினரிடம் இருந்து ஆர்.எஸ். எஸ் அமைப்பின் ஷாகாக்களை பாதுகாத்ததாக அவரே பகிரங்கமாக ஒப்புக்கொண்டதையும் பினராயி விஜயன் சுட்டிக் காட்டினார்.

### விஜய் ஆட்சியில் - 'டாஸ்மாக்' கடைகளில்

# 54 வகை உயர்ரக மது கிடைக்க ஏற்பாடு! இதுதான் மாற்றமா?

## கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் கேள்வி!

*திருவனந்தபுரம், ஜூலை 19-*


மேட்டூர் அணை திறப்பு எப்போது? என்று ஏங்கி தவிக்க டாஸ்மாக் கடையில் 54 வகை உயர் ரக மது கிடைக்க ஏற்பாடு. இது தான் மாற்றமா? என கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் புதுக்கோட்டை கே.ஆர்.முருகேசன் கேள்வி? எழுப்பியுள்ளார்.

கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் புதுக்கோட்டை கே.ஆர்.முருகேசன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தமிழக விவசாயிகள் கடந்த 5 ஆண்டுகளாக எந்த விதமான தடைகள் இன்றி முன்னாள் தமிழக முதல்வர் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஆணைப்படி தேதி மாறாமல் மேட்டூர் அணை திறக்கப் பட்டது அதனால் பல்லாயிரக்கணக்கான விவசாய பெருங்குடி மக்கள் விவசாயம் செய்து செல்வச் செழிப்போடு இருந்து வந்தனர்.

ஆனால் இன்று தமிழ் நாட்டில் ஒரு தரித்திரம் தலைமையிலான மூன்று கால்கள் கொண்ட ஆட்சி அமைந்தது முதல் கடந்த 5 ஆண்டுகளாக வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருந்த ஆட்சி ரிவர்ஸ் கியர் போட்டு கடந்த 60 நாட்களுக்குள் ளாகவே 5 வருடம் பின்னோக்கி சென்று விட்டது. இந்த மாற்றம் தான் தமிழக மக்கள் எதிர்பார்த்தார்களா?

இன்று தங்கள் வாழ்வாதாரம் மொத்தமாக முடங்கி விட்டதே என்று டெல்டா விவசாயிகள் கவலையடைந்துள்ளதைப்பற்றி



துளியும் கவலைப் படாமல் தற்குறி அரசு தமிழக குடிமகன்கள் கோரிக்கையை ஏற்று 54 வெளிநாட்டு மற்றும் வெளிமாநில உயர் ரக மதுபானங்கள் டாஸ்மாக் கடைகளில் கிடைக்க ஏற்பாடு செய்து அறிவிப்பு வெளியீடு என்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் வேலையாகும்.

அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து டெல்டா விவசாயிகள் கேட்கும் நீர் திறக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் புதுக்கோட்டை கே.ஆர்.முருகேசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### உள் தமிழகத்தில் 21ஆம் தேதி வரை

# 5 டிகிரி வரை வெப்பநிலை உயர வாய்ப்பு!

*சென்னை, ஜூலை 19-*

தமிழகத்தின் உள் மாவட்டங்களில் இன்று முதல் 21ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தைவிட 5 டிகிரி ஃபாரன்ஹீட் உயரக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் நேற்று (ஜூலை 18) மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் வட கடலோர தமிழகத்தில் மழை பெய்தது, 19ம் தேதி மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

21ம் தேதி வரை உள்தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தைவிட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. இத்தகவலை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

### கூடங்குளம் அணுமின் நிலையத்தின்

# 3 - 4 ஆம் அலகுகளின் கட்டுமானப் பணிகளை உடனடியாக நிறுத்துக!

## மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா அறிக்கை!

*சென்னை, ஜூலை 19-*

மனித நேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



கூடங்குளம் அணுமின் நிலையத்தின் 3 மற்றும் 4 ஆம் அலகுகளின் கட்டுமானப் பணிகளுடன் தொடர்புடைய ஆயிரக்கணக்கான தொழில்நுட்ப ஆவணங்கள், கட்டமைப்பு வரைபடங்கள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான தகவல்கள் இணையத் தரவு கசிவின் மூலம் வெளியானதாக வெளியாகியுள்ள தகவல்கள் நாட்டையே அதிர்ச்சிக் குள்ளாக்கியுள்ளன.

இந்த தரவு கசிவு சம்பவம் ஒரு சாதாரண இணையப் பாதுகாப்பு குறைபாடு அல்ல. அணுசக்தி நிலையம் போன்ற அதி முக்கிய தேசிய உள்கட்டமைப்பு தொடர்பான தகவல்கள் வெளிப்பட்டிருப்பது, அந்தத் திட்டத்தின் பாதுகாப்பு அமைப்புகள் ஊடுருவலுக்கு உள்ளாகியுள்ளனவா என்ற மிகப்பெரிய கேள்வியை எழுப்புகிறது. இது தேசிய பாதுகாப்பிற்கும், தமிழ்நாட்டு மக்களின் உயிர் மற்றும் வாழ்வாதாரத்திற்கும் மிகப்பெரிய அச்சுறுத்தலாக அமையக்கூடியது.

குறிப்பாக, கூடங்குளம் அணுமின் நிலையத்தின் 3 மற்றும் 4 ஆம் அலகுகள் தற்போது கட்டுமான நிலையில் உள்ள நிலையில், அந்தத் திட்டம் தொடர்பான முக்கிய ஆவணங்கள் வெளியேறியிருப்பதாகக் கூறப்படுவது, அந்தத் தளத்தின் பாதுகாப்பு மற்றும் பாதிப்புக்கு உள்ளாகும் சாத்தியக் கூறுகள் குறித்து தீவிரமான கவலையை ஏற்படுத்துகிறது. பாதுகாப்பு பலவீனமடைந்திருக்கக்கூடிய ஒரு சூழலில் கட்டுமானப் பணிகளை தொடர்வது பொறுப்பற்ற நடவடிக்கையாகும்.

எனவே, கூடங்குளம் அணுமின் நிலையத்தின் 3 மற்றும் 4 ஆம் அலகுகளின் கட்டுமானப் பணிகளை உடனடியாக நிறுத்தி வைக்க வேண்டும். இந்தத் தரவு கசிவின் தன்மை, அதன் உண்மை நிலை, பாதுகாப்பு பாதிப்பின் அளவு மற்றும் எதிர்கால அபாயங்கள் குறித்து உச்சநீதிமன்ற நீதிபதி தலைமையில் சுயாட்சியான விசாரணைக் குழுவை அமைத்து விரிவான ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

மேலும், விசாரணை முடிவுகள் மற்றும் பாதுகாப்பு மதிப்பீட்டு அறிக்கைகள் பொதுமக்கள் பார்வைக்கு வெளியிடப்பட வேண்டும். மக்கள் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்யாமல் எந்த அணுசக்தித் திட்ட விரிவாக்கமும் மேற்கொள்ளப்படக் கூடாது.

மக்களின் உயிரையும் எதிர்கால தலைமுறைகளின் பாதுகாப்பையும் விட எந்தத் திட்டமும் பெரியதல்ல என்பதை ஒன்றிய அரசு உணர வேண்டும். பாதுகாப்பு மீதான முழுமையான நம்பிக்கை மீண்டும் ஏற்படுத்தப்படும் வரை கூடங்குளம் அணுமின் நிலையத்தின் 3 மற்றும் 4 ஆம் அலகுகளின் கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட வேண்டும் என்பதே தமிழ்நாட்டு மக்களின் நியாயமான மற்றும் ஜனநாயகப்பூர்வமான கோரிக்கையாகும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### சிறைவார்டன் – கைதிகளால் அடித்துக் கொல்லப்பட்ட

# சபரி வர்மன் உடலை அடக்கம் செய்ய கிராம மக்கள் எதிர்ப்பு!

## நிவாரண உதவியை – உடனே வழங்கக் கோரி சாலை மறியல் – போராட்டம்!

*கன்னியாகுமரி, ஜூலை19-*

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாவட்ட சிறையில் அடைக்கப்பட்டு இருந்த மாற்றுத்திறனாளி இளைஞரான சபரி வர்மன் சிறை வார்டன்கள், சக கைதிகள் அடித்து கொலை செய்யப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதனால் பிரேத பரிசோதனை முடிந்தும் அவரது உடலை குடும்பத்தினர் வாங்க மறுத்தனர். இந்நிலையில் அவரது குடும்பத்தினரிடம் போலீசார் பேச்சு வார்த்தை நடந்ததை அடுத்து அவரது உடல் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் கிராம மக்கள் சபரி வர்மன் குடும்பத்துக்கு உடனடியாக இழப்பீடுகளை வழங்க வேண்டும் என உடலை அடக்க செய்ய எதிர்ப்பு தெரிவித்து அமரர் ஊர்தியை நிறுத்தி சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் அருகே ஈத்தங்காட்டை சேர்ந்த மாற்றுத்திறனாளி சபரி வர்மன் ( வயது 34). இவர் தடை செய்யப்பட்ட குட்கா விற்பனை செய்ததாக கூறி செந்தாமரைகுளம் போலீசார் கடந்த 9 ம் தேதி கைது செய்தனர். அதன்பிறகு சபரி வர்மன் நாகர்கோவிலில் உள்ள மாவட்ட சிறையில் அடைக்கப்பட்டார்.

அவரை சிறை வார்டன்கள், சக கைதிகள் அடித்து கொன்றதாக குடும்பத்தினர் குற்றம்சாட்டினர். இதற்கிடையே தான் அவரது உடல் நாகர்கோவில் மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. அப்போது சபரிவர்மன் உடலில் 19 இடங்களில் காயங்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இதனால் சபரி வர்மன் மரணத்திற்கு உரிய நீதி கிடைக்க வேண்டும். வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்ற வேண்டும். அவரை அடித்து கொன்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குடும்பத்தினர் போராட்டம் செய்தனர். கடந்த 4 நாட்களாக அவரது உடலை குடும்பத்தினர் வாங்க மறுத்தனர்.

இந்நிலையில் தான், நேற்று சபரி வர்மன் உடலை அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. பிரேதப் பரிசோதனை செய்யப்பட்ட வீடியோவின் சிடி தனியாக குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. நான்கு மருத்துவ குழுக்களால் காயங்களும், பிரேதப் பரிசோதனை அறிக்கையும் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது. அப்போது இரண்டும் ஒன்றாக இருந்தது. மேலும் சபரி வர்மனின் இறப்புக்கு காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. இதற்கு குடும்பத்தினர் ஒப்புக்கொண்டு சபரி வர்மன் உடலை பெற்று கொண்டனர்.

இதையடுத்து சபரி வர்மனின் உடல் அமரர் ஊர்தியில் ஏற்றப்பட்டு சொந்த ஊருக்கு எடுத்து செல்லப்பட்டது.சொந்த ஊரை அமரர் ஊர்தி நெருங்கியது அப்போது சபரி வர்மனின் சொந்த ஊர் மக்கள் அமரர் ஊர்தியை தடுத்து நிறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். சபரி வர்மன் குடும்பத்தினருக்கு வழங்க வேண்டிய இழப்பீடு மற்றும் நிவாரண உதவிகளை உடனடியாக வழங்க வேண்டும். அதுவுரை உடலை அடக்கம் செய்ய விடமாட்டோம் என்று கூறினர். இதனால் அதிகாரிகள் அவர்களை சமாதானம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டனர்.




திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி நகர தி.மு.கழக அலுவலகத்தில் தாராபுரம் நகர கழக நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடிக்குழு நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல. பத்மநாபன் தலைமையில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், நகர கழக செயலாளர் எஸ்.முருகானந்தம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் மாவட்ட துணை செயலாளர் பிரபாவதி பெரியசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தன்சேகர் உள்பட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், வாக்குச்சாவடி குழு நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.